# ரட்ணஜீவன் ஹூலும் யாழ். பல்கலைக்கழகமும்



எமது சமூகத் தற்கொலையை நிறுத்தவேண்டும்.
யாழ்ப்பாண மேட்டுக்குடி மேலாதிக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.
- ரட்ணஜீவன் ஹூல் -

● நீங்கள் யாழ் பல்கலைக்கழக உபவேந்தராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பின்னர், உங்களால் அப்பதவியினை ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை உருவானது. அதற்கான காரணங்கள் என்ன? அதுபற்றி உங்கள் கருத்து என்ன?

☯ உங்கள் கேள்வியே தவறானது. நான் பதவியை ஏற்றேன். துணைவேந்தராக இயங்கினேன். தீர்மானங்களை எடுத்தேன். ஆனால் சில சமூகவிரோதிகளின் நடவடிக்கைகளால், அங்கு என் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டது. இதை உணர்ந்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனக்கு விசேட விடுதலை தந்ததை அடுத்து நான் நாட்டுக்கு வெளியே வந்தேன். நான் துணைவேந்தர் என்பதனாலேயே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இந்த உத்தரவைத் தந்தது குறிப்பிடத்தக்கது. இல்லையேல், பேராதனைப் பல்கலைக்கழகத்திடமிருந்தே இதை நான் பெற்றிருக்க நேர்ந்திருக்கும். தற்போதும் நான் துணைவேந்தராகவே இருக்கின்றேன். என்னை ஜனாதிபதி பதவி விலக்கும்வரை நானே யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்.

இந்த நிலைமைக்கு காரணங்களானவை :

- துணைவேந்தர் பதவியில் கண் வைத்த சிலரின் எரிச்சல்.
- அவர்களின் மாணவர்கள் சிலர், மாணவர் சங்கத்தில் தலைவர்களாக இருப்பது.
- தமிழர் மத்தியில் தலைநிமிர்ந்திருக்கும் கலாச்சார, மதவெறி,
- மற்றும் யாழ். மேட்டுக்குடியினரின் மேலாதிக்கம் ஆகியவையே.

● யாழ். பல்கலைக்கழகப் பேரவை, யாழ் பல்கலைக்கழக உபவேந்தருக்காக மூன்று பெயர்களைப் பிரேரித்திருந்தது. அந்த மூவரில், ஜனாதிபதி உங்களைத் தெரிவு செய்வதற்கு ஏதாவது பிரத்தியேக காரணங்கள் இருந்தனவா?

☯ யாழ். பல்கலைக்கழகப் பேரவை, நான் பேரவைக்கு வெளியில் இருந்தும், என்னைத் தேர்ந்தெடுத்தது நூதனமானதல்ல. விண்ணப்பதாரிகளில் எனக்கு மட்டும் Ph.dக்கு மேலாக உயர் பட்டம், D.Sc இருந்தது. எனக்கு மட்டுமே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்கீழ் இயங்கும் 15 பல்கலைக்கழகங்களை நிர்வகித்த அனுபவமும், கல்வி பற்றிய பரந்த பாண்டித்தியமும், வெளியீடுகளும் இருந்தன. குறுகிய பாடச்சித்திகளுக்கு அப்பால், நிர்வாகத்தில் பரந்த ஈடுபாடும் எனக்கு இருந்தது. யாழ். பல்கலைக்கழகப் பேரவை என்னைத் தேர்ந்தெடுத்த பின்னர், ஜனாதிபதிக்கு ஏதேனும் பிரத்தியேக காரணம் இருந்ததா என்று கேட்பது குழப்பமானது. ஏன் பேரவைக்கு பிரத்தியேக காரணம் இருந்ததா என்று கேட்கவில்லை? இது குழந்தையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதுபோல் இருக்கிறது. என்னை விட்டு மற்ற இருவரில் ஒருவரை ஜனாதிபதி நியமித்திருந்தால் யாழ்ப்பாணத்துக்கு ஒரு உயர் பட்டதாரி இருக்க சில்லறை ஆளை நியமித்து இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டியிருப்பார்கள். யாழ்.பல்கலைக்கழகப் பேரவையினரையே இப்படியான தேசத்துரோகிகள் நிதர்சனம்.கொம் போன்ற இணையத்தளங்களில் வெருட்டியிருக்கின்றனர். பல்கலைக்கழகப் பேரவையைச் சேர்ந்த இந்தப் பெரியோருக்கே இந்த அச்சுறுத்தல் என்றால், இப்படிப்பட்டவர்கள் எவ்வளவுக்கு தமிழ் மக்களை அடக்குகின்றார்கள் என்று நீங்கள் சிந்தியுங்கள்.

● உங்களுடைய நியமனம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வகையான பிரதிபலிப்பை வெளியிட்டார்கள் ?

☯ பாராளுமன்றத்தில் வெறும் தூஷணம் பேசி தமிழ்க் கலாச்சாரத்தைக் கொச்சைப்படுத்தும் கஜேந்திரனும், மேலும் ஈழவேந்தனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னை எதிர்த்ததாகக் கூறியுள்ளனர். ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் அவர்கள் அப்படி ஒரு தீர்மானமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் எடுக்கப்படவில்லை என்று கனேடிய தமிழ் வானொலியில் (CTR) ஓர் நேர்காணலில் கடந்த பங்குனி 12ம் திகதி(2006) கூறியிருந்தார். இவ் ஒலிப்பதிவு ‘தமிழ் நாதம்.கொம்’இல் சில மாதங்களாக இருந்தது. தலைவர் சம்பந்தர் அவர்களும் இதை எனக்குத் தன் சொந்த வாக்கின் கீழ் ஏற்குமாறு கூறினார். பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப்புலிகள்- தமிழ்த்

தேசியக் கூட்டமைப்பினரிடையேயான ஓர் கூட்டத்தில், சு. ப. தமிழ்ச்செல்வனிடம், விடுதலைப் புலிகள் ஏன் என்னைப்போல் தகுதியான ஒருவரை எதிர்க்கிறார்கள் என்று காரணம்கேட்டபோது, தமிழ்ச்செல்வன் அவர்கள், தங்களுக்கு ஒரு எதிர்ப்பும் இல்லை, ஆனால், மாணவர்களை அடக்கமுடியவில்லை என்றும், இம்முறை விலத்தி நின்றால், அடுத்த முறை தாமே என்னைத் துணைவேந்தர் ஆக்குவார்கள் என்றும் கூறினார். உண்மையில் அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு வழியில்லை.

● உங்கள் நியமனத்துக்கு யாழ் பல்கலைக்கழக சமூகத்தினரின் ஒரு பகுதியினரால் காட்டப்பட்ட எதிர்ப்பானது, பல்கலைக்கழகத்தினுள் வெளிச்சக்திகளினால் உருவாக்கப்பட்டது என்று நீங்கள் கருதுகிறீர்களா? எப்படி?

☯ யார் இந்த பல்கலைக்கழக சமூகத்தினர்? இப்படிப் பல பெயர்களின் கீழ் என்னை எதிர்த்து பல பிரசுரங்கள், சுவரொட்டிகள் வெளிவந்தன. அவர்கள் யார் என்று ஒருத்தருக்கும் தெரியாது. நான் துணைவேந்தரானால், பல்கலைக்கழகத்தைத் தினம்தோறும் தனக்கு சொந்தமான, இலவசமாகப் படுத்துறங்கும் விடுதியைப் போல் கஜேந்திரன் உபயோகிப்பதை நான் தடுப்பேன் என்ற பயத்தில் அவர் என்னை எதிர்த்திருக்கலாம். சோதனையே எழுதாமல் யாழ். பல்கலைக் கழகத்தின் பட்டத்தினைப் பெற்ற பலரும், தமது பட்டங்களை நான் திரும்பித் தருமாறு கேட்டு விடுவேன் என்று என்னை எதிர்த்திருக்கலாம். துணைவேந்தராக நியமிக்கப்படாத பேராசிரியர்களும், அவர்களது மாணவர்களான மாணவர் சங்கத் தலைவரும், விடுதலைப்புலிகளின் பல்கலைக்கழகப் பொறுப்பாளரும் என்னை எதிர்த்திருக்கலாம். ஆனால், இவர்கள் தமது எதிர்ப்பை அங்கீகரிக்கும்படி யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தைக் கேட்டபோது, 2006ம் ஆண்டு பங்குனி மாதம் 5ம் திகதி கூடிய யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (UTA) நான் சரியான முறையில் நியமிக்கப்பட்டேன் என்றும், ஆகவே என்னைத் துணைவேந்தராக வரவேற்கவேண்டும் என்றும் தீர்மானித்து, அவர்களின் கோரிக்கையை நிராகரித்தது. அன்று இரவே, UTA கூட்டத்தில் பேசிய பேராசிரியர் சித்தம்பலத்தின் வீட்டிற்கு கல்லெறி விழுந்தது. அவர் அலுவலகப் பெயர்ப் பலகை உடைக்கப்பட்டது. இவற்றைக் கண்டிப்பதற்காக UTA மீண்டும் கூட இருந்தபோது விடுதலைப் புலிகளின் பொறுப்பாளரும், கஜேந்திரனும் அப்படிக் கூட வேண்டாம், தாம் அதனைப் பார்த்துக் கொள்வார்கள் என்று கட்டளை இட்டனர். இதுவே எமது தமிழ் மக்களின் சுதந்திரம். இதேபோல் வவுனியா வளாக சமூகத்தினர் 2006ம் ஆண்டு பங்குனி 22ம்திகதி கூடுவதற்கு இருந்தபோது விடுதலைப்புலிகளின் வவு னியா மாவட்டப் பொறுப்பாளர் ஞானம் அது தேவை யில்லை என்று கட்டளை இட்டார். எனக்கு எதிரானவர்கள் எதுவும் பேசலாம். ஆனால் எனக்குச் சார்பானவர்கள் வாயை மூடவேண்டும் என்பது எந்த வகையில் நியாயம்? இவற்றை ஊடகங்கள் ஒன்றும் பெரிதாக வெளியிடவில்லை. குறிப்பாக, எனக்கு வாக்களித்த யாழ். பல்கலைக்கழகப் பேரவையினருக்குக் கிடைத்த மிரட்டல்கள் பற்றி இலங்கையில் எந்த ஊடகங்களிலும் வரவில்லை. இந்த நேர்காணலால் உங்களுக்கும் பாதிப்பு ஏதும் வரலாம் என்று நான் பயப்படுகின்றேன்.

● இந்த விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு என்ன? அவர்களுடன் நீங்கள் தொடர்பு கொண்டீர்களா? அல்லது உங்கள்சார்பாக வேறு யாராவது தொடர்பினை மேற்கொண்டார்களா?

☯ பலர் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒருவருக்கும் சரியான பதில் கிடைக்கவில்லை. பேராயர்கள் வண. தோமஸ் சவுந்தரநாயகம், ராயப்பு ஜோசப், சு. ஜெபநேசன் போன்றோர் வெவ்வேறு கடிதங்களை விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கு எழுதியிருந்தார்கள். ஆனால் பதில் எதுவும் கிடைத்ததாக எனக்குத் தெரியாது.

● இந்த விடயம் தொடர்பாக சிங்கள சமூகக் கல்விமான்கள், அரசியல்வாதிகள் மத்தியில் எவ்வகையான பிரதிபலிப்பு இருந்தது?

☯ வியப்பு! தமிழரே தமது முன்னேற்றத்தை ஏன் எதிர்க்கிறார்கள் என்ற கேள்வி. சிங்கள இனவாதிகளுக்கு இது சந்தோஷம்.

● UTHR/Jக்கும் உங்களுக்கும் தொடர்பு உண்டு என்ற குற்றச்சாட்டு ஒன்று உங்கள்மீது வைக்கப்படுகின்றது. அவ்வாறு உங்களுக்கு ஏதாவது தொடர்பு இருந்ததா? அவர்கள் பற்றிய உங்கள் பார்வை என்ன?

☯ UTHR/J என்ற நிறுவனம் காலம்சென்ற துணைவேந்தர் கலாநிதி. துரைராஜா அவர்களால் தொடங்கப்பட்ட ஒரு நிறுவனம். அதில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் மட்டுமே அங்கம் வகிக்க முடியும். துணைவேந்தராகப் பதவி ஏற்றதன் பின்னர், 2006ம்ஆண்டு பங்குனியிலிருந்துதான் நான் அதில் அங்கம் வகிக்கத் தகுதியுடையவனானேன். ஆனால், நான் அதில் அங்கத்தவராகச் சேரவில்லை. அங்கத்தவர்கள் அனைவரும் பல்கலைக்கழக ஆசிரியர்கள். அங்கத்தவர்களில் முக்கியமான ஒருவர் எனது சொந்த அண்ணர். ஒரு கட்டத்தில் தம்பி என்ற முறையில் அவர்கள் பதிப்பித்த ‘முறிந்த பனை’ என்ற புத்தகத்தை வெளியிடச் சிறிய உதவி செய்திருந்தேன். அவர்களின் வெளியீடுகளில் ஒரு பங்குகூட நான் எழுதவில்லை. அவர்கள் தொடர்பாக அப்படி ஒரு குறையையும் நான் காணவில்லை. www.uthr.com என்ற இணையத்தள முகவரியில் அவர் களின் வெளியீடுகளைக் காணலாம். அவற்றைக் கவனமாக வாசித்தால், இலங்கை அரசாங்கத்தின் அட்டூழியங்கள் பலவற்றை அவர்கள் பட்டியலிட்டு அம்பலப்படுத்தியிருக்கிறார்கள் என்பதைக் காணலாம். உதாரணம்: சத்துருக்கொண்டான் படுகொலைகள், மற்றும் கிழக்கு மாகாணத்தில் இராணுவம் செய்த கொலைகள், நவாலி தேவாலயப் படுகொலைகள் போன்றவற்றை இவர்களே வெளியிட்டு, இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை

சர்வதேச அரங்கில் அப்பலப்படுத்தியுள்ளார்கள். இவர்களின் நேர்மையான செயற்பாடு காரணமாக, இவர்கள் எழுதுவது மேற்கத்தைய நாடுகளால் உடன டியாக ஏற்கப்படுகின்றது. ஆனால் எப்போதும் பொய் யையும், அரசாங்க எதிர்ப்புடன் மட்டும் எழுதும் ஊட கங்கள் - நாங்களே வாசித்துக் கை தட்டுவதற்குச் சரியே ஒழிய, வேறொன்றுக்கும் உதவாது. தமிழர் களின் விடுதலைக்கு UTHR/J பெரியஅளவில் பங்களித் திருக்கின்றது என வெளியில் கருதப்படுகின்றது.

● நீங்கள் ஒரு கிறிஸ்தவர். அதனால், உங்களு டைய எழுத்துகளில் இந்துமதத்தினரின் உணர்வு களைப் புண்படுத்தும் நோக்கில் நீங்கள் எழுதி வருவ தாகவும், மிகவும் கவனமாக கிறிஸ்தவ மதம் பற்றிய உயர்வான விம்பத்தைத் திட்டமிட்டு நீங்கள் உங்கள் பதிவுகளில் எழுதியிருப்பதாகவும் உங்கள் எதிர்ப்பா ளர்கள் கூறுவது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

☯ உங்கள் கேள்வி தமிழ் மேலாதிக்க தேசியவா தத்தின் வெறியைக் காட்டுவது போலாகும். (மன்னிக் கவும்) 'நாம் ஆண்ட தமிழர்கள், எங்கள் கலாச்சாரமே மிகச் சிறந்தது, எங்கள் சாதியே மிக உயர்ந்தது, எங்கள் சமயமே உண்மையானது.' இவையே இந்த மேலாதிக்க தமிழ்த் தேசியவாதத்தின் அறிகுறிகள். இவர்களுக்கு, எங்கள் தரப்பின் குற்றங்கள் பற்றிப் பேசுவதே மகா குற்றமானது. இதனால்தான் 1948இல் தோட்டத் தமிழர்களை நாம் கழற்றி விட்டோம். பின்பு முஸ்லிம்களைத் துரத்திவிட்டோம். இப்போது மட்டக் களப்பில் பிரச்சினை கிளப்பப்பட்டுள்ளது. கிறிஸ்தவர் களுக்கு எதிரான தமிழ் மேலாதிக்கவாதிகளின் பிரச்சி னைக்குரிய சில செயற்பாடுகளைக் குறிப்பிடுகின்றேன். நான் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தராக நியமிக்கப்பட்டபோது போது 'ஒருபேப்பர்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் சித்திரை 7ம் திகதி இதழில், பின்வரும் சாரப்பட எழுதுகின்றார், அதாவது, "கிறிஸ் தவர்கள் முன்பு சைவர்களாக இருந்து மதம் மாறிய வர்கள், இது துரோகத்தனமானது, இவ்வாறு மதம் மாறிய ஜீவன் ஹூலை யாழ்ப்பாணத்தில் சைவக் கோவில் ஒன்றைத் தன்னகத்தே கொண்ட யாழ். பல்க லைக்கழகத்தின் துணைவேந்தராக நடமாட விடக் கூடாது" என்று அவர் எனக்கு பயங்கரவாத எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

கடந்த கார்த்திகை மாதத்தில் விடுதலைப் புலிகளின் மறைந்த மாவீரர்களைக் கும்பிடும்படி பல தமிழ் ஊடகங்கள் வேண்டுகோள் விடுத்து இருந்தனர். இது இறந்தவர்களின் ஆவிகளை வேண்டுவது அல்லது கும்பிடுவது போலாகும். கிறிஸ்தவர்கள் தமது மத அனுஷ்டானப்படி ஆவிகளைக் கும்பிடுவது தவறானது. மாவீரர்களை நினைவு கூருவது என்பது வேறு, கும்பி டுவது என்பது வேறு. மாவீரர்களைக் கும்பிடுமாறு கிறிஸ்தவர்களை வற்புறுத்துவது அல்லது கட்டாயப் படுத்துவது அவர்களைப் போராட்டத்தில் இருந்து அந்நியப்படவே வழிசமைக்கும். தமிழ்க் கிறிஸ்த வர்கள் தூர விலகிச் செல்வார்கள். மேலும் புலிகளின் ஆலோசகர்களில் ஒருவரான திரு. சந்தியேந்திரா நடேசன், தமிழரின் மதம் சைவசமயமே என்பதைக் கிறிஸ்தவர்கள் ஏற்கவேண்டும் என்று சில வருடங் களுக்கு முன்பு கலிபோர்னியாவில் வழங்கிய விரிவுரை ஒன்றில் கூறியிருக்கின்றார். தமிழர்களாகிய நாம் பல கலாச்சார, மதங்கள், பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதை ஏற்கும் அளவுக்கு எமது விடுதலைப் போராட் டம், முன்செல்லாத நிலையில், இதைச் சொல்வது துரோகம் என்றால், அதைச் சொல்வது எமது இனத்தின் விடுதலைக்கு எனது பங்களிப்பு என்றே நான் கருது கின்றேன்.

நீங்கள் குறிக்கும் என் எழுத்துக்கள் ஆராய்ச்சி அடிப்படையில் எழுதப்பட்டவை. இதனைப் பல்கலைக் கழக வட்டாரங்களிலேயே விவாதிக்க வேண்டும். பத்திரிகைகளிலோ, சுவரொட்டிகளிலோ, அல்லது ஒரு தரப்பாயோ விவாதிக்கப்படக் கூடிய விடயங்கள் அல்ல இவை. ஆனால் ஒன்றை மட்டும்கூற விரும்புகின்றேன். நான் எனது பாரம்பரியம் என்ன என்று ஆராய்ந்தபோது சைவசமயத்தை எனது பாரம்பரியமாகக் கருதியே ஆராய்ந்தேன். அப்படிச் செய்யும்போது 19ம் நூற் றாண்டில் சிறுபிள்ளை பலி மற்றும் நல்லூர்க் கந்தசாமி கோவில் முற்றத்தில் 'வேசி' வியாபாரம் நடந்ததென்று ஆவணங்களைக் கண்டபோது அவற்றை உள்ளபடி எழுதுவது எனது கடனாகியது. அதனை மறைப்பது கல்விக்குத் துரோகம். சைவமதத்தை இறுக்கிப் பிடிப்பவர்களுக்கு இது நோவை உண்டாக்கி இருக் கலாம். கிறிஸ்தவர்களுக்கு இது முசுப்பாத்தியாக இருந்திருக்கலாம். இதேபோல்தான், அதே புத்தகத்தில் கிறிஸ்தவ குருமாரின் திருவிளையாடல்களையும், சாதி வேற்றுமைகள் எம்முள் இல்லை என்று சொன்னபடியே அதன் பேணல்களையும், கௌதம புத்தர் திருச்சபை யில் எப்படி புனித ஜெகோசா·.பட்(Jehosaphat) ஆக மாறி, அவர்தான் புத்தர் என்று அறியாமல் கும்பிடப் படுகிறார் என்றும் எழுதியபோது, அதை சைவமக்கள் கவனிக்காமல் விட்டிருக்கலாம் அல்லது முசுப்பாத்தி யாய் எடுத்திருக்கலாம். ஆனால், கிறிஸ்தவர் பலர், நான் என் மதத்தைத் தூஷிப்பதாகக் கருதுகிறார்கள். ஆழ்ந்த பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பாரம்பரியத்தை அறியாமல் இப்படி மனக்குழப்பம் அடைபவர்களுக்கு நான் சொல்வது இதுவே. நீங்கள் கல்கியையும், ஆனந்தவிகடனையும், குமுதத்தையும் மட்டும் வாசித் துக்கொண்டு ஆழ்ந்த புத்தகங்களை, ஆராய்ச்சி களைத் தயவு செய்து அறிஞர்களுக்கு விட்டுவிடுங் கள். இருதய சுத்தியும், கபடமற்ற நாவுமே கல்விக்கு அத்திவாரக்கல்.

● பொதுவாக உங்களைப் பற்றி சிங்கள சமூகத் தினரிடையே, நீங்கள் ஒரு குறுந் தமிழ்த் தேசியவாதி என்ற கருத்து பரவலாக அறியப்படும் அதே நேரம், தமிழர் தரப்பினரிடையே, நீங்கள் தமிழ்த் தேசியத் திற்கு எதிரானவர் என்ற கருத்து முன்வைக்கப் படுகிறது. இது தொடர்பாக உங்கள் கருத்து?

☯ தேசிய வெறி கொண்டவர்கள் என்னில் குறை கூறினால், அது நான் என்னவோ சரியாகச் செய்கின் றேன் என்று எனக்குக் காட்டுகிறது. களனி பல்கலைக்

கழகத்தின் அப்போதைய துணைவேந்தர், மானியங்கள் ஆணைக்குழுவில் "ஒரு புலி கொழும்புக்கு வந்து இங்கே புகுந்திருக்கிறது. அதை அடித்துத் துரத்த வேண்டும்" என்று கத்தியபோது, அதை நான் எனக்கு வழங்கிய ஒரு நல்ல சான்றிதழாகவே எடுத்தேன். அதேபோலவே , மேற்கத்தைய நாட்டுச் சுதந்திரம், தஞ்சம் ஆகியவற்றை ரசித்துக் கொண்டும், ருசித்துக் கொண்டும் இலங்கையில் உள்ளவர்கள் யுத்தம் செய்ய வேண்டும், பல்கலைக்கழகம் செல்லாது வகுப்புக்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்பவர்கள் என்மேல் குறை சொன்னால் அதுவும் அப்படியே ஆகும்.

● ஆரம்பகாலங்களில் தமிழ் விடுதலை அமைப்புகள் ஏதாவற்றுடன் உங்களுக்குத் தொடர்பு அல்லது பங்களிப்பு இருந்ததா?

☯ தமிழரசுக் கட்சி, தமிழர் ஐக்கிய முன்னணி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி போன்றவற்றுடன் குடும்பமாகவும், மற்றும் அதன் தலைவர்களுடன் தனிப்பட்ட, குடும்ப, சொந்தத் தொடர்புகள் பல இருந்தது. நான் என் தாயாருடன் பல சத்தியாக்கிரகங்களில் பங்குபற்றி இருக்கிறேன். 1970-72 காலப்பகுதிகளில், எனது தகப்பனார், பெரிய தகப்பனார் கு.நேசையா ஆகியோர் தமிழர் ஐக்கிய முன்னணியை உருவாக்குவதில் காத்திரமான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். நான் 1976இல் இலங்கையை விட்டு வெளியேறியதில் இருந்து வெளிநாடுகளில் இருந்த இலங்கைத் தமிழர்களுடன் (உதாரணம்: குமார் தம்பித்துரை, லோஜன் கனகரட்ணம்) போன்றவர்களுடன் சேர்ந்து தமிழர்களின் உரிமைப் போராட்டம் தொடர்பாக சில பங்களிப்புகளைச் செய்துள்ளேன். ஆனால் நாம் எல்லோரும் ஓரளவுக்கு இப்போது, வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு, அமைப்புக்களுக்கு புளித்துப் போனவர்கள் ஆகிவிட்டோம்போல் தெரிகிறது. அதுவும், தாமும் தமது பிள்ளைகளும் வெளிநாடுகளில் சுகமாக வாழ்ந்து கொண்டு, இலங்கையில் அப்பாவி மக்கள் பலியாகுவதைக் கை தட்டி வரவேற்கின்ற தமிழர்கள் பெரும்போலிகளாய் இருப்பதுதான் பெரும் துயரம்.

● பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராகக் கடமையாற்றியவர் என்ற வகையில், இன்றைய நிலையில் வட- கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்கள், வளாகங்களின் நிலை ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது எவ்வாறுள்ளது?

☯ நிலைமை உதவாது. ஆசிரியர்கள் பாடசாலைகளிலோ, பல்கலைக்கழகத்திலோ இல்லை. யாழ். பல்கலைக்கழகத்தில், வேலைக்கு விண்ணப்பிக்கும் வெளிநாட்டில் படித்த கொஞ்சப் பேரையும் ஏதும் பொய்ச் சாட்டுச் சொல்லி எடுக்கமாட்டார்கள். இயக்கங்கள் பல 1970இன் தரப்படுத்தலை எதிர்த்துத் தொடங்கியவை. ஆனால் இன்று தரப்படுத்தல் இருந்தாலே யாழ்ப்பாண மாணவன் ஒருவனுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் என்ற நிலையாகிவிட்டது. யாழ்ப்பாண மாணவன் பொறியியற்பீடம் உட்பட பல்கலைக்கழகத்துக்குச் செல்வதற்கு எடுக்கவேண்டிய புள்ளி வரம்பு 2004இல் 1.8648. அதேவேளை ஒரு வவுனியா மாணவன் எடுக்கவேண்டியது 1.9288. அதாவது வவுனியா மாவட்ட மாணவனைவிட யாழ்ப்பாண மாணவனுக்குக் குறைந்த புள்ளிகள் போதும். இதேபோலவே மருத்துவபீட அனுமதிப் புள்ளி வரம்பு யாழ்ப்பாணத்துக்கும், வவுனியாவுக்கும் ஏறத்தாழச் சமன். யாழ்ப்பாணம் இன்று பிற்படுத்தப்பட்ட (backward) பிராந்தியம் என்று வரையறுக்கப்பட் டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கான ஒதுக்கீடு, 1980ம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்கீட்டின் அடிப்படையிலேயே தற்போதும் கணிக்கப்படுகின்றது. தற்போது யாழ். குடாநாட்டில் குறைவாக உள்ள ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு சரியாகச் செய்யப்படின், தற்போது கிடைக்கும் அனுமதி எண்ணிக்கையும் கிடைக்காது. இதேவேளையில் மட்டக்களப்பு மாவட்டத்தில், பொறியியல் பீட அனுமதிக்கு 1.459 புள்ளிகளை ஒரு மாணவன் பெறவேண்டும். இது அம்மாவட்ட மாணவர்கள் நன்றாக சோதனை செய்கிறார்கள் இல்லை என்பதைக் காட்டுகிறது. இதேவேளை யாழ்ப்பாணத்திற்குக் கிடைத்த பிற்படுத்தப்பட்ட பிராந்திய வரையறை மட்டக்களப்புக்குக் கொடுக்கப்படவில்லை என்று மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு மனுவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதை 2005ம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. (இது 2007ம் ஆண்டுமுதல் நடைமுறைக்கு வரும்) தரப்படுத்தல்வேண்டாம் என்று தொடங்கி, இன்று அதற்காக நாம் கெஞ்சவேண்டிய நிலையே தற்போதைய எமது நிலையாகும்.

● அண்மைக்காலத்தில், கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுள்ளார், தமிழ்த்துறைப் பேராசியர் பாலசுகுமாரின் வெளியேற்றம் மற்றும் உங்களது நியமனத்தில் எதிர்ப்பு போன்றவை, தமிழ் மாணவ சமூகத்தின் கல்வியும் எதிர்காலமும் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளதை வெளிப்படுத்துகின்றது. இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

☯ இது கிழக்கில் நிறையக் காலமாகவே நடக்கிறது. தமிழ் ஊடகங்கள் பல யாழ். குடாநாட்டினராகிய எம்மாலும், எமது யாழ்ப்பாண மேலாதிக்க மனப்பான்மையுடனும் நடத்தப்படுகின்றன. ஆகையால், கடந்த காலங்களில் கிழக்கில் நடந்த சம்பவங்கள் பலவற்றைத் தமிழ் ஊடகங்கள் கவனிக்கவில்லை. முன்னாள் இடைக்காலத் துணைவேந்தர் யுவி தங்கராஜா காருடன் கடத்தப்பட்டார். பின்னர் அவரின் மைத்துனர் தராக்கி சிவராம் கெஞ்சிக் கேட்டதையடுத்து அவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் விடுதலை செய்யப்பட்டார். அவரது மடி-கணனி (Lap-Top) திருப்பிக் கொடுக்கப்படவில்லை. இதற்காக அவர் அதன் பெறுமதியான 185000 ரூபாவுக்காக மாதம் 15000 ரூபா வீதம் இன்றும் பல்கலைக்

கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குச் செலுத்தி வருகின்றார். அவர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் அப்போது அவருக்காகக் கண்ணீர்விட எந்த ஊடகங்களும் இருக்கவில்லை. பின்னர் துணைவேந்தர் மூக்கையா புலிகளின் மாணவர் சங்கத்தினால் பதவி விலகச் சொல்லி கட்டளையிடப்பட்ட நிலையில், போட்டிருந்த உடுப்புடன் மட்டும் பேரூந்தில் ஏறி கொழும்பு வந்து, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலமாக பதவி விலகினார். அப்போதும் யாரும் அழவில்லை. ஏனென்றால், அவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பதாலாகும்.

தற்போது எனக்கும் நடந்துள்ளது. மௌனமாக விடுதலைப் புலிகளிடம் எனக்காகப் பரிந்துரைத்த ஒரு சிலரைத் தவிர்த்து யாரும் அழவில்லை. இன்று ரவீந்திரநாத்திற்கு நடந்தது மட்டும் ஏன் www.tamilnet.comஇல் இருந்து எல்லா ஊடகங்கள் மூலமாகவும் பரவலாக அறியப்படுகின்றது. ஏன் இந்தப் பாரபட்சம்? அவருக்கு நடந்ததெல்லாம் அநியாயம் தான். இச்செயற்பாடுகள் தயவு தாட்சண்யம் இன்றி கண்டிக்கப்படவேண்டியவை என்பதில் மறு கருத்து இருக்க முடியாது.

ஆனால் சைவ யாழ்ப்பாணத்தார் மட்டும்தான் தமிழரா? இது தமிழ்த்துரோகம் ஆகாதோ? மாணவர்கள் தமிழர்களுக்குச் செய்யக்கூடிய உதவி படித்து அறிவார்ந்த மனிதராக ஆவது. அதற்குத் தடையாக உள்ள எந்த இடையூறும் நிறுத்தப்பட வேண்டும். அவர்களது படிப்பை நிறுத்தி ஆயுதப் பயிற்சிக்கு வன்னிக்கு வரச் சொல்வதையும், வராதோரைத் ‘துரோகி’ என முத்திரை குத்துவதையும் நிறுத்த வேண்டும். இலங்கையில் தமிழ் மாணவர்கள் கல்வி கற்பதற்குத் தடையாக விளங்கும் இந் நடவடிக்கைகளை ஆதரித்துக் கை தட்டி வரவேற் றுக்கொண்டு, வெளிநாட்டில் தம் பிள்ளைகளை ஹார்வேட், பிரின்ஸ்டன், ரொறன்ரோ ஆகிய பல்கலைக் கழகங்களுக்கு அனுப்ப முயற்சிப்போரின் வேஷம் கலைக்கப்பட வேண்டும். பிரபாகரன் - கருணா மோதலுடன் மட்டக்களப்பு மாவட்ட பல்கலைக்கழக அனுமதிப் புள்ளிகள் வீழ்ந்துள்ளன. அதாவது, அதே தொகை மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவதற்கான அனுமதி வரம்புப் புள்ளி குறைக்கப்படவேண்டியிருக்கிறது. மேலும், தமிழர் மத்தியில் உண்மையாகவே சமத்துவம் இருப்பதாயின், ஏன் யாழ். மாவட்டத்துக்கு பிற்படுத்தப்பட்ட பிராந்திய வரையறை எடுத்துக் கொடுக்கப்பட்டபோது, மட்டக்களப்பு மாவட் டத்துக்கு எடுத்துக் கொடுக்கப்படவில்லை?

மேலும், பல்கலைக்கழகங்களுக்கு மேலதிக வளாகங்கள் அளிக்கப்பட்டன, அவற்றை எதிர்காலத்தில் தனிப் பல்கலைக்கழகங்களாக்கும் நோக்கத்துடனேயே இவ்வாறு மேலதிக வளாகங்கள் கொடுக்கப்பட்டன. இதன் அடிப்படையில், யாழ். பல்கலைக்கழகத்துக்கு வவுனியா வளாகமும், கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு திருகோணமலை வளாகமும் வழங்கப்பட்டது. ஆனால் இத்திட்டத்தின் கீழ் ரஜரட்ட, சப்பரகமுவ, வயம்பா போன்றவையே வளாகங்களாய் இருந்து பல்கலைக்கழகங்களாய் தரமுயர்ந்திருக்கின்றன. ஆனால், வவுனியாவும், திருகோணமலையும் இன்னும் வளாகங்களாகவே பின்நிற்கின்றன. ஆனால் யாழ்ப்பாண மேலாதிக்க தமிழ்த்தேசியவாதிகள் இதற்கு இலங்கை அரசின்மேல் பழியைப் போடுவர். அது ஓரளவுக்கு உண்மையும்கூட. ஆனால் வவுனியா வளாக மாணவர்கள் தமக்கு யாழ். பல்கலைக்கழகம் நிதி ஒதுக்காமைக்கு கொந்தளித்தனர். இதன் தொடர்ச்சியாக, வவுனியா வளாகத்துக்கு நிதி ஒதுக்குமாறு பாராளுமன்றத்தின் Committee on public enterprises யாழ். பல்கலைக்கழகத்துக்கு கட்டளைகளிட்டும் அது நடக்கவில்லை. இதனால் ஆணைக்குழுவினராகிய நாம் நிதியை தனித்தனியாக யாழ். பல்கலைக்கழகத்துக்கும் வவுனியா வளாகத்திற்கும் ஒதுக்க நேரிட்டது. வவுனியா வளாகத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்று தெரிவித்தனர். நான் இப்பிரச்சினையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் எழுப்பி ஆசிரியர்களை நியமிப்பதற்கான சம்பள நிதியை ஒதுக்கப் பண்ணினேன். நான் செய்த அந்த நல்ல காரியத்தை, எனக்கு வேலை எடுப்பதற்காகச் செய்த திட்டம் என்றனர் யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள சில அறிவுஜீவிகள். அமெரிக்காவில் நிரந்தர பேராசிரியர் பதவியில் இருந்த நான், அதனைத் துச்சம் எனக் கருதி விட்டுவிட்டு எமது மக்களுக்காகச் சேவை செய்ய வந்தவன் என்பதைத் தெரிந்திருந்தபோதும், சில்லறைத்தனமாக செயற்பட்டனர் அந்த அறிவுஜீவிகள். பின்பும், கடந்த இரு மாதங்களுக்கு முன்னர், வவுனியாவிலே 4 வெற்றிடங்களுக்கு 4 சித்தியுள்ளவர்கள் விண்ணப்பித்திருந்தனர். ஆனால் வளாகப் பீடாதிபதியும், துறைத்தலைவரும் யாழ். பல்கலைக் கழக தெரிவுக்குழுவைக் கெஞ்சிக்கேட்டும் இருவருக்கே வேலை கொடுக்கப்பட்டது. இதுவே தெற்கில் என்றால் நான்கு வெற்றிடங்களையும் நிரப்பி, இன்னும் ஆசிரியர்கள் வேண்டுமென்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சொல்லி மேலும் எடுத்திருப்பார்கள். ஆனால் நாம் இப் பதவி வெற்றிடங்களை நிரப்பாத நிலையில், மேலதிக ஆசிரியர்களுக்கான அனுமதியைக் கேட்டால், முதலில் இருக்கும் வெற்றிடத்தை நிரப்பிய பின்னர் அது பற்றிப் பேசுவோம் என்றே கூறுவார்கள். நாம் அதைக் குறை சொல்லமுடியாது. நாம் காலம்காலமாக திறமையான விண்ணப்பதாரிகள் வரக் காத்திருப்போம் போலும்! ஒரு தகுதியான விண்ணப்பதாரி இருக்கும்போது வெற்றிடத்தை நிரப்பாதது சட்டவிரோதம் என்பது குறிப்பிடத்தக்கது. வவுனியா வளாகத்தை பல்கலைக்கழகமாக்குவதற்கு அவ்வளாக மாணவர்களும், அம்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர், சதாசிவம் கனகரட்ணம், வினோ சுப்பிரமணியம், கேதாரலிங்கம் ஆகியோர் என்னுடன் சேர்ந்து செயற்பட முற்பட்டனர். நான் பிரதேசவாதத்தை கிளப்புகின்றேன் என்றனர் சிலர். பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்முயற்சியைக் கைவிடச் சொல்லி கட்டளையிட்டனர். 2005ம் ஆண்டு மார்கழிக் குழப்பத்துடன் இதை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற வலுவும் இல்லாமல் போயிற்று.

● நீங்கள் பல்கலைக்கழக மானியக் குழுவில் அங்கம் வகித்தபோது, தமிழ்ப்பகுதிகளில் உள்ள பல்கலைக்கழகத்துக்கு நீங்கள் ஆற்றிய பங்களிப்பினைக் கூறமுடியுமா?

☯ நான் ஆணைக்குழுவில் சேர்ந்த ஆரம்பத்தில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு வருடத்துக்கு சுமார் ரூ.45,000/ மாணவன்/ வருடம் என்ற வகையிலேயே பணம் ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால் தெற்கு பல்கலைக்கழகங்களுக்கு சுமார் ரூ80,000/ மாணவன்/ வருடம் ஒதுக்கப்பட்டது. இதைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நான் சுட்டிக் காட்டிய போது, ஏனையோர் இது பிழையானது என்று ஏற்று யாழ். பல்கலைக்கழகத்துக்கு ரூ90,000/ மாணவன்/ வருடம் என ஒதுக்கீடு செய்யப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீடமும், வவுனியா தொழில்நுட்ப பீடம் ஆகியவை நான் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதவியில் இருந்த காலத்தில் என் முயற்சியினாலேயே ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றின் வளர்ச்சியானது தொடரும் யுத்தத்தால் பின்தங்குகின்றது. திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. சம்பந்தருடன் சேர்ந்து திருகோணமலை வளாகத்தை கோணேசபுரியில் பெரிதாய் கட்டுவதற்கு நிதி ஒதுக்கி வேலையும் தொடங்கினோம். இதுவும் தொடரும் யுத்தத்தினால் இன்னும் சரியாக விஸ்தரிக்கப்படவில்லை. 2005இல் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்ட பின் ஒரு பரீட்சைத் திணைக்கழக இயந்திரப் பிழையால் விளைவுகள் மாறின. இதனால் இருக்கும் இடத்தை விடப் பலரை மருத்துவ, பொறியியல் பீடங்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டியிருந்தது. நான் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராகிய நிலையில், இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, எனது கடைசி ஆணைக்குழுக் கூட்டத்தில், யாழ்ப்பாணத்துக்குப் பொறியியல் பீடத்தை அளிக்குமாறும், மருத்துவபீட வெற்றிடங்களை நிரப்புமாறும் என் சொந்த வேண்டுகோளாகக் கேட்டேன். இது அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் வந்த குழப்பங்களால் அந்த நிதி இன்று றுகுண, ரஜரட்ட பல்கலைக்கழகங்களுக்குச் சென்றுள்ளது. நாமே எமது அழிவு. வேறும் பலதும் சொல்லலாம். எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

● இறுதியாக புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ச் சமூகத்தினருக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

☯ அங்குள்ள தமிழரை வாழவிடுங்கள். உங்கள் தேவைகளும் அவர்களுடைய தேவைகளும் பல விதங்களில் முரண்பட்டவை. 1948இல் இலங்கைத் தமிழராகிய நாம் 11%, மலையகத் தமிழர் 11%, முஸ்லிம்கள் 7%. இன்று இலங்கைத் தமிழர்கள் 4% என்று பாடப் புத்தகங்கள் சொல்கின்றன. கிழக்கில் நாம் பலனற்றுப் போனோம். முஸ்லிம்களை (இன்று சுமார் 9%)பகைத்து விட்டோம். மலையகத் தமிழர்(சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின் 7 %)எம்மை ஒருபோதும் நம்பமாட்டார்கள். எமது சமூகத் தற்கொலையை நிறுத்தவேண்டும். யாழ்ப்பாண மேட்டுக்குடி மேலாதிக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல், இலங்கையில் எமக்கு வருங்காலம் இல்லை. ஆனால் லண்டன், ஒஸ்லோ, பாரிஸ், நியூயோர்க், ரொறன்ரோவில் உள்ள புலம்பெயர்ந்த தமிழராகிய உங்களுக்கு இதனால் என்ன ?

• • • • • • • • • • • • • • • • • • • • • •

கடந்த ஆறுமாத காலமாக மூடப்பட்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், யாழ்.பல்கலைக்கழகம் எதிர்வரும் 22ம் திகதி முதல் மீண்டும் செயற்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ரவீந்திரநாத் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு, இதுவரை என்ன நடந்தது என்று தெரியாமல் உள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பாலசுகுமார் கடத்தப்பட்டுப் பின் விடுவிக்கப்பட்டார். கடந்த மாதம் வவுனியா விவசாயக் கல்லூரியில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று மாணவர்கள் பலியாகியிருந்தனர். இச்சம்பவங்கள் எல்லாம் வடக்கு-கிழக்கில் தமிழ் மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்குத் தடையாக உள்ள விடயங்களாகும்.

இந்நிலையில், யாழ். பல்கலைக்கழக உபவேந்தராக நியமிக்கப்பட்டு சர்ச்சைகளுக்கு உள்ளாகி, இன்றும் உத்தியோகபூர்வமாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருக்கும் திரு. ரட்ணஜீவன் ஹூல் அவர்கள் சமீபத்தில் கனடா வந்திருந்தார். இலங்கை வடகிழக்கில் தமிழ் மாணவர்களின் கல்வி நிலை, முன்னேற்றம், அவற்றுக்கான தடைகள் மற்றும் சர்ச்சைக்குரியதாக மாற்றப்பட்ட அவரது துணைவேந்தர் நியமனம் போன்ற விபரங்களை 'வைகறை' வாசகர்களுக்கு அறியத்தரும் நோக்கத்தில் அவரை 'வைகறை' பத்திரிகையின் ஆசிரியர் குழுவினர் பேட்டி கண்டனர். எமது சில கேள்விகள் அவருக்கு எரிச்சலை ஏற்படுத்தின. இருந்தும் எமது கேள்விகள் எல்லாவற்றுக்கும் பதிலளித்தார். அவற்றை அவருடைய வார்த்தைகளில் அப்படியே 'வைகறை' வாசகர்களுக்குத் தருகின்றோம். இப்பேட்டி தொடர்பாக எவராவது தமது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் அவற்றை எழுதி அனுப்பினீர்களேயானால் தொடர்ந்து வரும் வெளியீடுகளில் அவற்றை பிரசுரிப்போம்.

- 'வைகறை' ஆசிரியர் குழு (editor@vaikarai.com)

தற்போது பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் முன்பு வேலை செய்த ட்ரெக்தெல் பல்கலைக்கழகத்தில் தற்காலிகமாக கடமையாற்றுகின்றார்.

நன்றி : வைகறை (இதழ் 123 - தை 05 2007)